

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 19.06.2026

# அவர் முதல்வர் அல்ல!

ஐந்தாண்டு காலத்தில் அரைகோடி மாணவ, மாணவியரை அனைத்துத் துறையிலும் தகுதி படைத்தவர்களாக உயர்த்திய மாபெரும் திட்டம் தான் - மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது ஆட்சி காலத்தில் உருவாக்கிய 'நான் முதல்வன்' திட்டம் ஆகும். அவரது கனவுத் திட்டம் அது. அத்தகைய மகத்தான திட்டத்தின் பெயரை 'TN SKILL CORPORATION' என பெயர் மாற்றி இருக்கிறது தற்குறி அரசு.

இதுவரை 'தற்குறிகள்' என்று சொல்வதற்கான முழுமையான பொருத்தத்தை இப்போது தான் அடைகிறார்கள்!

**'நான் முதல்வன்' என்று சொல்லிப் பாருங்கள். 'TN SKILL CORPORATION' என்று சொல்லிப் பாருங்கள். எந்தச் சொல் உற்சாகத்தையும், தன்னம்பிக்கையையும் விடாமுயற்சியையும், வெற்றிக்கான உணர்ச்சியையும் கொடுக்கும்? 'நான் முதல்வன்' என்ற சொல்லை உச்சரிப்பவர் எவராக இருந்தாலும் அவர்கள் அனைவருமே தங்களது துறையில் 'நான் முதல்வன்' என்ற உணர்ச்சியையும், உந்துதலையும் பெறுவார்கள். அதனால் தான் அந்தப் பெயரைச் சூட்டினார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

என்னரும் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பண்ணரும் கலை ஞானத்தால்
பராக்கிரமத்தால் அன்பால்
உன்னத இமய மலை போல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?

- என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஏக்கத்துடன் பாடினார். அத்தகைய ஏக்கம் போக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட திட்டம் அது.

**"எனது தந்தை பேருந்து நடந்துநர். எனது அம்மா பீடி சுற்றும் தொழிலாளி. நான் இன்று ஐ.பி.எஸ். ஆகி இருக்கிறேன். நான்கு ஆண்டுகளுக்கு முன் இதே போன்ற ஒரு மேடையில் உங்களைப் போன்று கூட்டத்தோடு கூட்டமாக பின்புறம் உட்கார்ந்து இருந்தேன். இன்று ஐ.பி.எஸ். ஆகிவிட்டேன். அரசின் திட்டத்தால் தான் இது சாத்தியம். என்னைப் போல நீங்களும் ஆகலாம்" என்று ஐ.பி.எஸ். ஆன மாணவி ஒருவர் பேசினார். இதுதான் 'நான் முதல்வன்' திட்டத்தின் மகத்தான வெற்றி ஆகும்.**

'நான் முதல்வன்' திட்டத்தால் பலன் பெற்று ஐ.ஏ.எஸ்.ஆன அதிகாரி ஆன ஒரு மாணவன், "எனக்கு 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலமாக கிடைத்த ரூ.1.15 லட்சம் தான் பெரும் உதவியாக இருந்தது. அதனை வைத்துத்தான் படித்தேன்." என்றார். இதுதான் 'நான் முதல்வன்' திட்டத்தின் மாபெரும் வெற்றி ஆகும்.

'நான் மட்டும் முதல்வர் அல்ல, நீங்கள் அனைவரும் முதல்வன் தான்' என்று சொல்லி இத்திட்டத்துக்கு, 'நான் முதல்வன்' திட்டம் என்று பெயர் சூட்டினார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். ஐந்தாண்டு காலத்தில் 50 லட்சம் இளைஞர்கள் இதற்கான பயிற்சியைப் பெற்று நல்லபல பணிகளில் சேர்ந்துள்ளார்கள்.

'நிறுவனங்களை உருவாக்கத் தயாராக இருக்கிறோம். அதற்குத் தகுதி வாய்ந்த திறமைசாலிகளை உருவாக்கிக் கொடுங்கள்' என்று பல்வேறு நிறுவனங்கள் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களிடம் சொல்லி, அதற்காக அவர் உருவாக்கிய திட்டம் தான் 'நான் முதல்வன்'. 'நமக்கெல்லாம் பெரிய கம்பெனியில் வேலை கிடைக்குமா?' என்று ஏங்கிய இளைஞர்களுக்கு தன்னம்பிக்கையை விதைத்த திட்டம் அது.

**அந்த திட்டத்தின் நோக்கத்தையே சிதைக்கும் வகையில் 'TN SKILL CORPORATION' என்று பெயர் சூட்டி இருக்கிறார் முதலமைச்சர் விஜய். சிலருக்கு தானும் செய்யத் தெரியாது. அடுத்தவர் செய்ததையும் கெடுப்பார்கள். அத்தகைய ரகம் விஜய். ஒரு நல்ல திட்டத்தின் நோக்கத்தைச் சிதைத்து, அதனை ஒரு பயிற்சியைப் போல சிதைத்து விட்டார் விஜய். அவரிடம் இருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?**

**'நான் முதல்வன்' திட்டத்தின் அதிகாரப்பூர்வ தளத்தில் 'TN SKILL CORPORATION' என்று பெயரை மாற்றிய முதலமைச்சர் விஜய், அத்திட்டம் தொடர்பான அனைத்து பழைய பதிவுகளையும் நீக்கி இருக்கிறார்கள். வீடியோ பதிவுகளை நீக்கி இருக்கிறார்கள். மே 15 ஆம் தேதியில் இருந்தே பதிவுகள் இருப்பதாக செய்திகள் வெளியாகி இருக்கிறது.**

பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டு விடாது. 'நான் முதல்வன்' என்ற சொல்லை அகராதியில் இருந்து இந்த ஆணவம் பிடித்தவர்களால் நீக்க முடியாது. இத்திட்டத்தால் பலன் பெற்றவர்களின் அறிவுத் திறனை செயலற்றதாக ஆக்க முடியாது. 'நான் முதல்வன்' திட்டத்தால் பணி பெற்றவர்களின் பணியை பறிக்க முடியாது. 'நான் முதல்வன்' திட்டத்தால் தன்னம்பிக்கையையும் துணிச்சலையும் பெற்றவர்களின் துணிச்சலைப் போக்க முடியாது.

**பெயரை நீக்குவதால் பெரிய ஆளாக ஆகிவிட முடியாது விஜய். 'நான் முதல்வன்' என்று சொல்லும் போதே 'மு.க.ஸ்டாலின்' பெயர் தான் விஜய்க்கு நினைவுக்கு வருகிறது என்றால் இத்திட்டத்தின் அடித்தளம், விதை அவர் போட்டது ஆகும். எத்தனையோ திட்டங்கள் வரும். போகும். ஆனால் மக்கள் மனதில் நின்றவை சில தான். அத்தகைய திட்டங்களில் ஒன்று 'நான் முதல்வன்' ஆகும்.**

2021 ஆம் ஆண்டுக்கான குடிமைப் பணி தேர்வு முடிவுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 27 மாணவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். 'நான் முதல்வன்' திட்ட பயிற்சிகளின் மூலமாக கடந்த ஆண்டு 57 பேர் தேர்வு ஆனார்கள். அது 'நான் முதல்வன்' திட்டத்தின் மகத்தான சாதனை ஆகும். இது போன்ற ஒரு திட்டத்தை சிந்திக்கத் தெரியாமல் சிதைக்கும் வகையில் பெயரை மாற்றி இருக்கிறார் விஜய்.

**பிரதமர் மோடிக்கு கொடுத்த கடிதத்தில், "ஆண்டுதோறும் ஐந்து இலட்சம் இளைஞர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய பணியிடைப் பயிற்சிகள் (Internships) மற்றும் தொழில் துறையுடன் இணைந்த திறன் பயிற்சிகளை வழங்கும் "இளைஞர் திறன் மற்றும் வேலைவாய்ப்பு இயக்கத்தை" (Youth Skill and Employment Mission) செயல்படுத்த விழைகிறேன்" என்று சொல்லி இருக்கிறார் விஜய். இதுதான் 'நான் முதல்வன்' திட்டம் ஆகும். அதாவது 'நான் முதல்வன்' என்ற ஸ்டிக்கரை கிழித்து விட்டு புது ஸ்டிக்கர் ஒட்டி இருக்கிறார் விஜய். தன்னால் புதிதாக எதுவும் கிழிக்க முடியாது என்று விஜய்க்குத் தெரியும்.**

**'TN SKILL CORPORATION' என்று மாணவர்களிடம் சொன்னாலும், 'பழைய நான் முதல்வன் ஸ்கீம் தான்' என்று மாணவ, மாணவியர் சொல்வார்கள். அப்படி உச்சரிக்கப்படும் ஒவ்வொரு நொடியும் தமிழ்நாட்டை ஆள்வது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினே!**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (18.06.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தேசிய இளைஞர் அணிச் செயலாளர் திருமதி ஸ்ரீநிதி மோகன் தி.மு.க.வில் இணைந்தார். அதுபோது கழக துணைப் பொதுச்செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி, எம்.எல்.ஏ., செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் உடனிருந்தனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி. துவக்கி வைக்கிறார்! காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 103-வது பிறந்தநாள் மாபெரும் பட்டிமன்றம்!

## மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை,ஜூன்.19-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 - வது பிறந்தநாளை யொட்டி மாபெரும் பட்டிமன்றம் மாவட்டச்செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி வரவேற்புரையில் 21.06.2026 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு அருள்முருகன் டவர்ஸ், 200 அடி ரேடியல் சாலை, பல்லாவரத்தில் நடைபெறுகிறது.

மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட துணைச் செயலாளர் து.மூர்த்தி, மாவட்ட பொருளாளர் வ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மாபெரும் பட்டிமன்றத்தை கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. துவக்கி வைக்கிறார்.

**மாபெரும் பட்டிமன்றம் விவரம்:**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நிலைத்த புகழுக்கு பெரிதும் காரணம்? சளைக்காத உழைப்பா? சரித்திர சாதனைகளா?**

நடுவர்: நகைச்சுவை நாவலர்' புலவர் மா.இராமலிங்கம்

சளைக்காதா உழைப்பே! முனைவர் சசிகுமார் - நாகர்கோவில் மலர்விழி

சரித்திர சாதனைகளே! முனைவர் துரைபாண்டி - பேராவூரணி நீலவேணி

இதில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், க.செல்வம் எம்.பி., தாம்பரம் மாநகர் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ. மனோகரன், மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் வீ.தமிழ்மணி, திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எல்.இதயவர்மன், ஆலந்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.என்.பி.வெங்கட்ராமன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்பு செழியன், க.அன்புச் செல்வன், ஆதிமாறன், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் பி.டி.சி.ஜி.செல்வராஜ் இரா.பொன்னுராம் அ.தமிழ்மாறன் என்.நவீன் சாய்ஜெயகாந்த் பாரதி ஆர். எஸ்.கிருத்திகா தேவி சி.பிரதீப் ஒன்றிய செயலாளர்கள் : எஸ்.டி.கருணாநிதி ந. கோபால் பையனூர் எம். சேகர் ஏ.வந்தேமாதரம் பி.சந்தானம் ஜி.கே.விவேகானந்தன் [எ] ரவி எம். டி.லோகநாதன் கே.பி. ராஜன் இ.மணி நகர செயலாளர்கள் : ஜெ.சண்முகம் எஸ்.நரேந்திரன் டி.பாபு எஸ்.ஐபருல்லா கோ.சத்தியமூர்த்தி எம்.கே.டி.கார்த்திக் ஆர்.சதீஷ்குமார் த.வினோத்குமார் பகுதி கழக செயலாளர்கள்: ப.குணாளன் வே.கருணாநிதி என்.சந்திரன் எஸ்.சேகர் எஸ்.இந்திரன் இ.ஜோசப் அண்ணாதுரை த.ஜெயக்குமார் இ. எஸ்.பெர்னாட் டி.காமராஜ் ஆ.நடராஜன் ஏ.கே.கருணாகரன் ஆர்.சுரேஷ் பொதுக்குழு உறுப்பினர்கள்: எம்.எஸ்.கே.இப்ராகிம் ஆர்.டி. பூபாலன் எம்.ஆர்.சீனிவாசன் ஆர்.எஸ்.சங்கர் க. தேவேந்திரன் எஸ்.சதீஷ் கே.எத்திராஜ் எம்.செல்வகுமார் மா.கணேஷ்பாபு செ.அருள்தேவி இரா.பாஸ்கரன் மு.ரஞ்சன் ஜிஜேந்திரன் ராமு எம்.கஜா [எ] கஜேந்திரன் துரை.சண்முக மணிகண்டன் மனோகரி சண்முகமணி பேரூர் செயலாளர்கள் : மு.தேவராஜ் ஜி.டி.யுவராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

இறுதியில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# தடை செய்யப்பட்ட குட்கா த.வெ.க. ஆட்சியில் மீண்டும் தலைதூக்குகிறதா?

## திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூரில் 15 கிலோ குட்கா பறிமுதல் – ஒருவர் கைது;

## "போதைப் பொருள் தடுப்பில் அரசு தோல்வியடைந்ததா?" என பொதுமக்கள் கேள்வி

திருவள்ளூர், ஜூன் 19:

தமிழகத்தில் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலைப் பொருட்களின் விற்பனையை முற்றிலும் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்படும் நிலையில், திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூரில் 15 கிலோ குட்கா பறிமுதல் செய்யப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உணவு பாதுகாப்புத் துறையினரும் காவல்துறையினரும் இணைந்து சோதனையில் ஈடுபட்டனர். பிள்ளையார் கோயில் தெரு, எம்.ஜி.ஆர். நகர், புதுமாவிலங்கை உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற ஆய்வின் போது, புதுமாவிலங்கை பகுதியில் சுரேஷ் என்பவர் நடத்தி வந்த மளிகைக் கடையில் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 15 கிலோ குட்கா பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதையடுத்து, தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை விற்பனை செய்ததாக சுரேஷ் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளன. த.வெ.க. ஆட்சியில் குட்கா, கஞ்சா உள்ளிட்ட தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் தொடர்பான பறிமுதல் சம்பவங்கள் தொடர்ந்து வெளியாகி வருவது, தடுப்பு நடவடிக்கைகள் போதுமான அளவில் செயல்படுகிறதா என்ற கேள்வியை எழுப்புவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை இலக்காகக் கொண்டு தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக தொடர்ந்து தகவல்கள் வெளியாகுவது பெற்றோர்களிடையே கடும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக சமூக ஆர்வலர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோத குட்கா விற்பனைக்கு பின்னால் செயல்படும் வலையமைப்புகளை முழுமையாக கண்டறிந்து, விநியோகச் சங்கிலியை முறியடிக்கும் வகையில் அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கண்காணிப்பு மற்றும் அமலாக்க நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றும் பல்வேறு தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

# அரசு கொள்முதல் செய்த நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதம்!

## விவசாயிகள் வேதனை

செங்கல்பட்டு,ஜூன்.19-

செங்கல்பட்டு அருகே மழை காரணமாகவும், அரசு அதிகாரிகளின் அலட்சியம் காரணமாகவும் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாகியது. குறிப்பாக செங்கல்பட்டு மாவட்டம் வில்லியம்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட சாஸ்திரம்பாக்கம் பகுதியில் தமிழக அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசின் இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சாஸ்திரம்பாக்கம், வடகால் மற்றும் இதனை சுற்றியுள்ள கிராமப்புறத்தில் இருக்கும் விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் விளைந்த நெல் மணிகளை அறுவடை செய்து இந்த நெல்கொள்முதல் நிலையத்திற்கு கொண்டு வந்தனர்.

இதனை தொடர்ந்து விவசாயிகளிடம் இருந்து தமிழக அரசு நெல்கொள்முதல் செய்திருக்கும் நிலையில், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் திறந்த வெளியிலேயே வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக இந்த நெல் மூட்டைகள் நீரில் நனைந்து வீணாகி வருகிறது.

விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படாதது விவசாயிகளிடையே கவலை, வேதனை மற்றும் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது. கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையின் காரணமாக நெல் மூட்டைகள் அனைத்தும் நனைந்து சேதமடைந்து வருகிறது. குறிப்பாக இன்று பெய்த மழையில் பல நெல்மூட்டைகளுக்குள் மழைநீர் புகுந்து நெல் சேதமானது, மேலும் சில மூட்டைகளில் இருந்த நெல்மணிகள் முளைத்து காணப்பட்டன.

விவசாயிகளின் பல மாத உழைப்பின் பலனாக விளைந்த நெல் மூட்டைகள், இப்படி மழையில் நனைந்து சேதமாவது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மேலும் மழை காரணமாக திறந்த வெளியில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நெல் சேதமடைந்தால் அரசுக்கு மிகப்பெரிய நஷ்டம் ஏற்படும் நிலை உருவாகி உள்ளதாகவும், இதுபோன்ற பாதிப்புகளை தவிர்க்க எதிர்காலத்தில் நிரந்தர சேமிப்பு கிடங்குகள் அமைக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### திருமதி துர்கா ஸ்டாலினின் கார் ஓட்டுநர் – கழக முன்னோடி

# என்.ஆனந்தன் புதல்வர் ஏ.திருமலை (எ) திலீப் - எம்.வித்யா திருமண வரவேற்பு விழா!

## கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!


சென்னை, ஜூன். 19

கழக முன்னோடியும், திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களின் கார் ஓட்டுநருமான என். ஆனந்தனின் புதல்வர் திருமண வரவேற்பு விழா நாளை ஜூன் 20 அன்று நடைபெறுகிறது.

கழக முன்னணியினர் பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

இவ்விழா பற்றிய விவரம் வருமாறு:-

திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களின் கார் ஓட்டுநரும், கழக முன்னோடியுமான என். ஆனந்தன் - திருமதி ஏ.தேவிகா ஆகியோரின் புதல்வர் ஏ.திருமலை (என்ற) திலீப் - செங்கல்பட்டு மாவட்டம் - தாம்பரம் வட்டம் - கஸ்பாபுரம் ஆ.முருகன் - திருமதி எம்.ஜெயசக்தி ஆகியோரின் புதல்வி எம்.வித்யா ஆகியோரின் திருமண வரவேற்பு விழா நாளை 20.6.2026 - சனிக்கிழமை மாலை 6.30 மணி அளவில் சென்னை - பல்லாவரம் - கண்டோன்மெண்ட் போர்டு திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



இம்மண விழா வரவேற்பில் கழக முன்னோடிகள் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.